இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 1 மட்டம் 4
LWU 2314 – அரசியலமைப்புச் சட்டம் II
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 05.09.2006 நேரம்: பி.ப 3.00 - பி.ப 3.40

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்

1. 'எந்தவொரு நபரும் பிறப்பால் தீயவனாகவோ அல்லது நல்லவனாகவோ இருக்க மாட்டார், ஆனால் அவனுடைய வாழ்க்கை நடவடிக்கைகள் அவனை நல்லவனாகவோ அல்லது தீயவனாகவோ மாற்றும்'. Wasala Sutta – Lord Buddha

   மேலே தரப்பட்ட கூற்றுக்கமைவாக பிறப்பால் ஒவ்வொரு நபரும் சமம் ஆனால் அவன் அல்லது அவனது நடவடிக்கைகள் மற்றும் அக்கறைகள் மூலம் பாகுபாட்டுக்கு உட்படுத்தப்படலாம்.

   1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் உறுப்புரை 12க்கு அமைய மேலே தரப்பட்ட கூற்றை மதிப்பிடுக.

2. இலங்கையின் நெப்போ பல்கலைக்கழக உபவேந்தர் கல்வி சார், கல்வி சாரா ஊழியர்களிடையே உள்ளகக் குறிப்பொன்றை அனுப்பி வைத்தார். அக்குறிப்பில் வேலை நேரத்தின் போது கல்வி சார், கல்வி சாரா ஊழியர்கள் தற்போதைய அரசாங்கத்தை விமரிசிக்கும் வகையிலான எந்த ஒரு கட்டுரைகளையும் உடைமையில் வைத்திருப்பதிலிருந்து தவிர்க்க வேண்டும் எனவும் அவ்வாறு அரசாங்கத்தை விமரிசிக்கும் எந்த ஒரு ஆக்கத்தையும் உடமையில் வைத்திருப்பது குற்றம் எனவும் குறிப்பிடப்பட்டு இருந்தது.

   1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் அத்தியாயம் III றில் உள்ள அரசியலமைப்பு உத்தரவாதங்களுடன் தொடர்புறுத்தி இத்தகைய குறிப்பொன்றின் பங்கீட்டை நீர் எவ்வாறு நோக்குவீர்.

(பதிப்புரிமை பெற்றது)